833

உ

கடவுள் துணை.

ஸ்ரீ மகாபாரதத்தில்

பஞ்சபாண்டவர்

வைகுந்தக் கும்மி.

இவை,

கோயம்புத்தூர்

புஸ்தக வியாபாரம்

K. உச்செ கவுடர்,

விருப்பத்தின்படி,

செ[illegible]ஷன் ஆப் இந்தியா பிரஸில்

[illegible]ப்பெற்றது.

[illegible]23. [அணா 2.

7-AUG 1923

031, 85x.
N23
224788

894.8111
2404

உ

கடவுள் துணை.

ஸ்ரீமகாபாரதத்தில்

பஞ்சபாண்டவர்

வைகுந்தக்கும்மி.

வழிபடுகடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

கூப்பிட்டகையார்க் குதவுங்குருமறைநூல்
கூப்பிட்டுவாழ்த்தெதன் குணக்குன்றுன்—கூப்பிட்டு
மால்காணுச்சோதி மகிழ்ந்தளித்தசேயன்
கால்காணுய் நெஞ்சேசகதி.

கும்மி.

காப்பு.

முந்தியுதித்த விநாயகனே கைலை முக்கண்ணனரிட தன்மகனே, தொந்திவயிற்றுவிநாயகனே நாயேன் சொல்லுவேன் பஞ்சவர் பாரதத்தை. (1)

மாயவனுருடன் ஐவர்கள் துரோபதை வைகுந்தஞ்சேர்ந்த கதைபாட, தாயகமாகவென் நாவிற்குடியிரும் தாயேசுரஸ்வதி தேவியம்மா. (2)

பரமனருளுங் குருபரனேவள்ளி பங்கனே தெய்வானை நாயகனே, தருமர்கதைகளைப் பாடிடவேயெந்தன் வறுமைநோயெலாந் தீர்த்திடுவாய். (3)

பையரவின்மிசை பள்ளிகொண்டோன் பாரதமாங்கதை நான் பாட, வையகந்தன்னில் விளங்கிவரும் நல்ல வாலசரஸ்வதி முன்னடவாய் (4)

குந்திமாதேவியார் மக்களுடன் ஐவர் கூடவேவைகுந்தஞ்சேர்ந்தகதை, விந்தையதாகவே நான்பாடச்செந்தி வேலவன்பொற்பதங் காப்பாமே. (5)

பஞ்சவர்வைகுந்தஞ் சேர்ந்தகதையது பாடவெந்நாளும் பிரபலமாய்,;செஞ்சொற்புலவர் பொறுத்தருளுவீர் குற்றம் செப்புங்கிழின் பிழையதுவே. (6)

நூல் வரலாறு.

பஞ்சவர்சூதாடி நாடிழந்தார் மாயன் பாரதப்போர்தனை யுண்டுபண்ணி, செஞ்சிலைகொண்டு ஸ்ரீராமர்துணையாக பஞ்சவர் பாரதம் வென்றதுவே (7)

வாட்டமில்லாத்துரி யோதனன் நூற்றுவர் மன்னர்படையும் மடியடித்து, நாட்டிகஞ்சேர்அத்தி னுபுரிநீதியாய் தருமனுக்கே பட்டங் கட்டிவிட்டார். (8)

பட்டணம்நீதியாய் ஆறிலொன்றாகப் பணமொன்றுகட்டளைத தானிறுத்தி, திட்டமதாக அரசுசெங்கோல்முறை திக்குவிஜயஞ் செலுத்தினரே (9)

பையரவுதனிற் பள்ளிகொண்டமாயன் பார்புகழ்துவாரபதி யிருந்து, வையமறிவோர் தூதனுப்பித் தர்மர் மகிழ்ச்சியாயங்கே வரவழைத்து. (10)

தர்மர்துரைதன்னை முன்னிருத்தியவர் தம்பியர் நால்வரும் பின்னிருத்தி, வர்மக்கலியனும்நாளை வருகிறான் வைகுந்தம்போக வே வேணுமென்றார். (11)

பாங்குடன் வைகுந்தவாழ்வுபெருந்திருப் பதியின்பாலிப்போ நான்போவேன், நீங்களுங்கூடித் துரோபதையாளுடன் நிச்சயந் தப்பாமல் வந்திடுங்கோள். (12)

என்றுசொல்லியவர் தங்களையேமாயன் ஏகுவீரென்றேயனுப் பிவிட்டார், மன்றுதனில்துரு வாசமுனிசாபம் வந்துபத்தாயுரம் மக்கள்பட்டார். (13)

நாமுமிருப்பது ஞாயமன்றேயினி நற்பதி வைகுண்டம்போ வோமென்று, வாமனவதார மாயவன்தானங்கே வந்தொரு ஆலின் கீழ்ப் பள்ளிகொண்டார். (14)

பள்ளிகொண்டாலின்கீழ் கண்துயில்மாயனை பத்தியேவேட னுமவ்வழியாய், புள்ளிமானென்று செவியிதுவேயென்று கள்ளமா யம்பினையெய்துவிட்டான். (15)

விட்டகணைசென்று மாயவன்பாதத்திற் பட்டுருவக்கண்ட வில்வேடன், பொட்டெனவோடிப் பதறியழுதுடன் பூமியில்வீழ்ந் துப் புலம்பலுற்றான். (16)

மானென்றுநானம் பெய்துவிட்டேன் சாமி வஞ்சகமில்லை யென்னெஞ்சகத்தில், தேனுலாவு துளப லட்சுமி மாதுபங்காவுந்தஞ் சிந்தையறியுமே யென்மனதை. (17)

வெம்பியேவிம்மி யழுகலுற்றான்வேடன் அம்பதைவாங்கியே தான்பார்த்து, முன்பு விதிப்படி தப்பாதுநீயும் கும்பியழுகாதே வில்வேடா. (18)

அந்திப்புரத்தில்நீ சென்றுநின்றேதர்மர் சேவகரையுங்கண்டு ஓர் வசனம், பக்திசேர் ஐவரில் வீமன் விஜயனன் பக்கம்வருகவே சொல்லையென்று (19)

224788

நல்லதென்றேசொல்லி அத்திபுரத்தினில் ராசன்துரைதர்மர் வாசல்முன்னே, சொல்லுமேவன் விண்ணப்பங் கேளுமென்று வேடன்சொல்லுவான் ஐவரைத்தான் பணிந்து (20)

மாயவன் துவாரகா பட்டணத்தைவிட்டு வடிமேல்மூலையோரலடியில், ஆயாசமாகவே வீமன்விஜயனை அரைநொடிதன்னில் வரச்சொல்லினர். (21)

வேடனுஞ்சொல்லி யவன்போனன்தர்மர் வீமன்விஜயனைத் தானழைத்து, தாடாண்மையுள்ளநற் றம்பியரேயேதோ சாயியுஞ் சொல்லிய சஞ்சலத்தை. (22)

நீங்களிருபேருஞ் சென்றவரைக் கண்டு நேரானவார்த்தை வகையறிந்து, தாங்கும்பலமெல்லாம் வாங்கிடுவான்நீங்கள் சாதியைக் கையாலே தீண்டவேண்டாம். (23)

அண்ணல்மொழிப்படி யாமெனவேயவர் ஆலடிதன்னிலே பள்ளிகொண்ட, கண்ணனைத்தேடி வருகையிலேயவர் காலிலோத்தத்தின் சேறுகண்டார். (24)

கண்டுகலங்கியே தெண்டனிட்டுவீமன் கைபதற தம்பிமெய்பதற அண்டர்பணிந்திடும் பாதமதில்ரத்தம் அண்டவேயெய்தவன் யாவர்சொல்லும், (25)

தேவர்கள் நான்முகன் முக்கண்படைத்திட்ட சிவனுமென்ன இன்னிலத்தில், யாவர்களானாலும் இன்னதென்றுசொன்னால் இப்போதவர்தலை கொய்திடுவோம் (26)

கோபங்கள் கொள்ளாதே போர்வீமா சற்றும் குற்றம்நினையாதே வில்விஜயா, பூவில்துருவாசமாமுனி சாபமே பூண்டதுயென்வினை மூண்டதென்றார். (27)

அத்திபுரத்துச் சரசுசெய்யும் நீங்கள் ஐவருந் துரோபதையாறுபேரும், பத்தியாய் வைகுண்டம் வந்திடுங்கள் உங்கள் பக்கத்துணையாக நான்வருவேன். (28)

என்றுசொல்லிவீமா வில்விஜயா யிப்போ ஏதோயென்தேகம படபடப்பாய், குன்றியுயிர்விட்டுப் போகுதையாவென்னைக் கூடியிருவருந் தூக்குமென்றார். (29)

காயாம்பூமேனியாய் எங்களண்ணனுமுன்னை கைதொட்டுதூக்கவே சொல்லவில்லை, ஆயாசமேனிந்த வில்குதையைத்தொட்டு ஆலித்தெழுந்திரு மென்றுரைத்தார். (30)

வாடியவின்குதையாலேயவர்பலம் வாங்கியே வைகுந்தவாசல்கண்டார், தேடியேவீமன் விஜயனுமேயங்கு செய்சடங்குசெய்துடக்கிவிட்டார். (31)

அடக்கமுஞ்செய்து வரும்வழியில்நல்ல ஆயன்துவாரகாபட்டணத்தில், துடுக்குடனேகள்ளர் கொள்ளையிட துடித்தங்கே வீமன் அர்ச்சுனனும். (32)

போர்க்கஞ்சாவீமனுந் தெண்டெடுக்கப் பலம் போதாமல் நொந்துமனதிலெண்ணி, ஆர்க்கஞ்சாவீரன் அர்ச்சுனனும்வில்லை அடக்கிவளைக்கவலுமையில்லை. (33)

இங்கேயிருக்கவும் நீதியில்லை நாமும் எந்தவழியேனும் போவோமென்று, தங்காமல்அத்தி புரத்தினுக்கேசென்று தர்மரைக் கண்டு அடிதொழுதார். (34)

அடிதொழுதுநின்ற தம்பியரேநம்ம ஆயன் அழைத்திட்ட செய்தியென்ன, வடிவுள்ளவீமா வில்விஜயா அந்த மார்க்கந்தெரியவே சொல்லுமென்றார். (35)

சொல்லுவோம் சுவாமியின் பாதத்திலேயேதோ வில்லம்புபட்டுத்தட்டுருவி, வெல்லுங்கரந்தொடை யாடியதைக்கண்டு விற்குதை நீட்டியே தூக்கிவிட்டோம். (36)

வில்லின்வழியே யிருவர்பலத்தையும் மெய்யுருகையினல்வாங்கிவிட்டார், வல்லவர்போலவர் கூடுவிட்டுத்திரு வைகுந்தவான்கதி சேவித்தாரே. (37)

அண்ணவென்றேயவர் சொல்லுமொழிகேட்டு அழகானதருமரும் நெஞ்சுருகி, மண்ணினில்வீழ்ந்து புரண்டழுதுசுவாமி வைகுந்தஞ் சேர்ந்தாரே தம்பிகளே. (38)

கார்ரார்ந்தமேனியன் பாதத்திலேரத்தம் கண்டீர்களோதம்பி போர்வீமா, யோரார்ந்ததிண்புயன் செல்லுந் திருவடி வில்விஜயா நாம் காண்பதெப்போ. (39)

என்றுபுலம்பி பரதவித்தார் தர்மர் குந்திமாதேவியுங் கூடழுதார், கன்றதைத்தேடிய மான்போலேமிக கதறியழுதாளே துரௌபதையாள். (40)

அழுதுபுலம்பி மனதாறியவர் அத்திபுரத்தினில் வீற்றிருந்தார், பழுதுபோகாமல்ரெண் டய்யமார்கள்வந்து பங்குமணிவித்த ஞாயஞ்சொன்னார். (41)

அய்டமார்ஞாயமுந் தான்கேட்டு தர்மர் ஐந்துநாள்போனபின் வாருமென்றார், பையவே அத்திப் புரத்தெருவீதியை பார்த்துக்கலியனுந் தோன்றிடவே. (42)

தாயார்தலையிற் சுமையைவைத்து அவன் தன்கையில்சட்டியும் தானெடுத்து, பாயுந்தலைச்சுமை முன்னேவைத்துப் பெற்ற பாக்கியவானுக்கு முட்டியொன்று. (43)

கொண்டபெண்சாதிக்கு குதிரைவைத்துப்பட்டுக் குடையும் அவனே பிடித்துவர, கண்டந்த வீமனும் அண்ணவென்றேவரக் கலியன்வந்ததைக் கண்டாரே. (44)

அப்போதேபார்ப்பாரும் வந்தார்கள் அங்கே அடிதடியும் ம.. பிடியுடனே, செப்பரிதாகிய எங்கள் வழக்கைநீ தீர்க்கவே வே..றுமென்று தானுரைத்தார். (45)

பரிட்சித்தன்[illegible]ானை அரசாளுவானுங்கள் பங்குமனை ஞாயந் தீர்ப்பானென்று, வீ[illegible]சையதாகவே அய்யமார்க்குச்சொல்லி வந்தவழியே அனுப்பிவைத்தார். (46)

இந்தவிதமாய்க் கலியன்வந்தான்நமக் கிங்கேயிருக்கவேபோதாது, சொந்தமதாகிய தம்பியரைநோக்கிச் சொல்லுவார் தருமரும் நல்லவழி. (47)

அத்திபுரத்தை யரசாளநம்மா லாகாதல்லாற்றம்பி சொல்லுவேன்கேள், சத்திசேர்வைகுண்டந் தேடவேணும் நம்ம சாமிபதம் இனி நாடவேணும். (48)

ஆராபோர்வீமா வில்விஜயா தம்பியானநகுல சகாதேவா, பாருள்ள நம்ப வருச்சுனனாரிட பாலனுக்கேமுடி சூட்டவென்று.

வெற்றிபெறும்நல்ல நாரணனாரிட விந்தைப்பதம் இனிக்காணவேணும், அத்திபுரத்தை யரசாளும்பரி சித்தனுக்கேமுடி சூட்டவேணும். (50)

ஆனைகுதிரைகள் சோடினையாய் நம்ம அத்திபுரத்தையலங்கரித்து, சேனையெல்லாமிங்கே விளித்திடுங்கள்நம்ம தேசமெல்லாஞ் சேதி செப்பிடுங்கோள். (51)

நாமநட்சத்திரமுகூர்த்தமிட்டுநம்ம நாட்டிலுள்ளோரெல்லாங் கூட்டமிட்டு, வாளபிமன்னன் பெற்றசுதனுக்கு வாய்த்ததென்றே முடிசூட்டிவைத்தார். (52)

பாட்டியாளாகிய குந்திமாதேவியை பக்கத்துணையாக முன்னிருத்தி, வாட்டமில்லாதைவர் துரோபதையாளுடன் வைகுண்ட வாழ்பதி செல்லவென்றே. (53)

தாயாரைப்போற்றி அடிபணிந்தேஐவர் தன்னுடன் துரௌபதை தாள்பணிந்து, வாயாரநல்ல வசனமுஞ் சொல்லிநீ வாழ்த்தி விடைதர வேணுமென்று- (54)

குந்திமாதேவி யலறிவிழுந்தங்கே கோவென்றழுது மனமெலிவாய், யெந்தனிடமக்கள் பஞ்சவரே யெனக் கெள்ளுந்தண்ணீரு மிறைப்பவரார். (55)

பரிட்சித்திருக்கிறான் அஞ்சவேண்டாந்தாயே பாரம் அவன் மேலே வைத்துவிட்டோம், வரியதாகவிடை கொடம்மாவென்று வாங்கியே அப்புரம்போகலுற்றார். (56)

காந்தாரியென்னும் பெரியதாயாரையும் கண்டடிபோற்றிமிக வணங்கி, வாநந்தமாயெங்கள் மாயன்திருவடி வைகுண்டம்போக விடைகொடம்மா. (57)

அட்டிசொல்லாதேநீ நூற்றுவரைப்பெற்ற அன்னைக்காந்தார மன்னன்மகளே, மட்டங்காத்திரு வைகுண்டமேசெல்ல வாழ்த்தி விடைதா வேணுமென்றார். (58)

குந்திமாதேவியர் தன்னருளால்வந்த குஞ்சரம்போலுருபஞ்ச வரே, எந்தனுக்குமந்த குந்திமாதேவிக்கும் எள்ளுந்தண்ணீரு மிரைப்பவராரர். (59)

காந்தாரிநொந்து மனதாறிமாயன் காரணவைகுண்டம்போங் களென்றான், சாந்தமாகவிடை கொடுக்கஐவர் தன்பதியாரை யகல விட்டார். (60)

பொன்னும்புதையலும் என்னசெய்யும்உயிர் போம்பொழுது வரக் கண்டதுண்டோ, மண்ணுலகாசைகள் வேண்டாமென்றே யுயர் வைகுண்டம்போகத் துணிந்தாரே. (61)

அத்திபுரத்தை யரசுசெய்யும்பரிச் சித்துவரச்சேனை சூழ்ந்து வர, வெற்றிவெண்சாமரை சூழ்ந்துவரக்கையில் வெண்குடை காணக் கவிந்துள்ள. (62)

விஞ்சுதர்மர்வீமன் விஜயன்நகுலன்மெய் வீசும்சகாதேவன் துரோபதையும், வஞ்சகக் கலியுக மாகாதென்றேய்வர் வடக்குத் திசையில் நடக்கலுற்றார். (63)

பரிந்துநடக்கின்ற ஐவரையுங்கண்டு பட்டணம்வாய்விட்டலறி யழ, திருந்துபரிட்சித்து மன்னர்சபையுடன் செயசெயவென்றனர் பின்னடக்க. (64)

பாற்குடியான பேருந்தொடர்ந்தைவர் பாதம்பணிந்தங்கே தெண்டனிட்டு, ஆறிலொன்றான் கடமைகொள்ளும் ஐவர் அருமை நோக்கி நினைந்துருக. (65)

அங்கங்கேநின்றவர் தான்புலம்ப இந்த அத்திபுரத்தையரசாள, செங்கோல்முறைவழி நானறியேனென்று தேம்பிநின்றேபரிட்சித் தழுதான். (66)

விரசுபற்றியிவர் பின்தொடர்ந்துவந்த மிக்ககுடியானபேர்களு க்கும், அரசுபெற்றபரி சித்தனுக்குஞ்சொல்லி அத்திபுரத்துக்கனுப் பிவைத்தார். (67)

அத்திபுரத்துக்கனுப்பிவிட்டு ஐவர் அங்கேவெகுதூரம்போ கையிலே, பத்திசேர் கங்கைக்கரை காணவேநின்று பஞ்சவர்துரோ பதை நீராடி. (68)

ஆண்டியென்றேவேடம் பூண்டுகொண்டேயவர் அப்புரம் போகையில் சித்ரவனம், தாண்டியரியவனங்கடந்துமலே தங்கும் வனத்தில் நடந்தாரே. (69)

ஆளிபுலிசிங்கம் வாழும்வனம்விட்டு அப்புறம் ஐவரும்போ கையிலே, ஏழுபரிகட்டித் தேரேறுஞ்சூரியன் யேகிக்கடலுள் புகுந் திடவே. (70)

வேந்தர்நடக்கவே கால்வெளிச்சமாக வெண்ணிலாத்தோன்றி யுதயமதாய், மாந்தரறியாதரக்காவனம்விட்டு வந்தேகடப்பமரத் தடியில். (71) 5

தங்கியிருந்துமேதர்மரும்மாயவன் தம்பிமார்நால்வருந்துரோபதையும், அங்கவர் தங்க மனதறிய்நம்ம வத்திபுரந்தேடிப் போவாராம் (72)

மனதொன்றறியாதமன்னவனே முன்னே மாம்பழமானது சாட்சியுண்டோ. இனியொன்றுஞ்சொல்லாதே வைகுண்டம்போவது ஏற்குமென்றே ஐவர்தானடந்தார். (73)

அந்தவனம்விட்டு அப்புறம்போகையில் ஆதித்தனங்கேயுதயமதாய், விந்தையதாகவே சூரியனைக்கண்டு மெய்யடிபோற்றியே தெண்டனிட்டார். (74)

காளிபூதங்களும் வாழும்வனம்விட்டு காண்டாமிருக வனங்கடந்து, ஆளிகள்வாழும் வனத்தில்வந்தாரங்கே அக்கினியாறொன்று தோன்றியதே. (75)

வைப்பமதையெங்கும் ஓடியால்கொண்ட மாயன்பதத்தை மனதிலெண்ணி, ஐயமில்லாமல் குறுக்கேவருகின்ற அக்கினியாற்றைக் கடந்தாரே. (76)

அக்கினியாறுகடந்துபின்னேவர அண்ணல்துரைதர்மரேது சொல்வார், பக்கலில்வருகின்ற தம்பியரேவெகு பாவம்வருமிந்த வில்லுகளை. (77)

அம்புகள்பூட்டி விடுஞ்செயலால்நமக் காவதென்னேபொல்லாப் பாவமென்ன, தம்பிமார்நால்வரும் அண்ணல்மொழிப்படி தண்ணீரில்போக யெறிந்துவிட்டார். (78)

போரவழிதடம்நேருதப்பியொரு பூங்காவில்நின்று திகைத்திடவே, காருறுமேனியனைவர்முன்னாகக் கணபதியாய்வழி காட்டலுற்றார். (79)

கட்டழகாவலர் போகையிலே யங்கே கந்திருவன்வந்துநேர்ந்துக்கொண்டு, வெட்டிவழியை மறித்துக்கொண்டு வெகு வீருடனே நீங்க ளாரெனவே. (80)

அத்திபுரமெங்கள் பட்டணந்தானடா அய்யர்பேர்பாண்டு மகாராசன், சத்தியந்தவறாத சந்தனுராசாவின் தன்குலந்தானடா யெங்கள்குலம். (81)

உங்கள்குலத்தினில் நூற்றுவர்தங்களை ஒக்கமடித்தவர் நீங்களன்றோ, தங்கிநின்றேபழி தாங்களடா அதுதப்பினாலுங்களூர் போங்களடா. (82)

வைகுண்டம்போரபேர் நாங்கள்பழியேற்க மாட்டாதென்றேயவர்தானுரைக்க, ஐயப்படாமலே துரோபதையாள்தன்னை அடக்கியெடுத்தங்கே நடக்கலுற்றார். (83)

கொல்லத்துணிந்தானே போர்வீமன் அந்த கோபமறிந்தாரே தர்மதுரை, அல்லதம்பிநாம் வைகுண்டம்போரபோ அவனைக் கொல்லவிளியாகாதென்றார். (84)

ஆகாதென்றேசொல்லக் கந்திருவன்றன்னை அப்புறம் கையால் பிடித்தெறிந்து, வாகாய்த்ரௌபதையாளையுங்கூட்டி வடக்குத்திசையில் நடக்கலுற்றார். (85)

அந்தவனம்விட்டுப் போகையிலேபெரி தானவனமொன்று அவ்விடத்தில், சந்தோஷமாகவே ராஜரிஷிதன்னை தான்கண்டு பஞ்சவர் தாழ்ந்து நிற்க. (86)

அஞ்சவேண்டாமடா நாகமடந்தைய ராடியபொய்கையிது வாகும், வஞ்சகக்கலிபோக நீங்களும்நீராடி வாருமென்றேமுனி தானுரைத்தார். (87)

உரைத்தபடியதில்நீராடியவர் உள்ளமகிழ்ந்து இருக்கையிலே, சிறக்கவேநாக மடந்தையர் வந்து தென்னவரைவரைத் தான் வணங்க. (88)

எங்களிருப்பிடம் நாகலோகமங்கே யேகியேநீங்கள் வரவேணும், உங்களைப்போலவே பிள்ளைகளைநாங்க ளிங்கிதமாகப்பெறவேணும். (89)

வேணுமெனுஞ்சொல்லை தாமறிந்துமே விந்தையதாகிய கன்னிகளே, பேணியழைக்கவும் நீதியல்ல நாங்கள் பேரானவைகுண்டம் போவார்கள். (90)

போகவென்றேசொல்லி நாகமடந்தையர் போற்றியராஜரிஷியுடனே, ஆகமகிழ்ச்சியாய் வைகுண்டம்போகவே ஆனவிடையுங் கொடுத்தாரே. (91)

விடையதுகொண்டு வனம்போகவழி மீதிருந்தேயொரு பாம்புவர, அடையவேபற்றி விழுங்கியதைக்கண்டு ஆலித்துவீமன்கிழித்தெறிந்தான். (92)

பாம்புமாறியோர் பார்ப்பானகவே பார்த்தங்கே தருமரும் எதுரைப்பார், சாம்பசதாசிவன் செயலேரிஷி தன்சாபமோவிங்கே சொல்லுமென்றார். (93)

வாசமுனிவர்பூசைக்கு சீஷனன்மாமலர் கொண்டுவரும்வழியில், நேசமதாயொரு வஞ்சியரைக்கண்டு ஆசைமயலாகிநின்றுவிட்டேன். (94)

செப்பரிதாகிய பூசைதப்பிமுனி அப்பவே பாம்பாகத்தான் சபித்தார், எப்பவென்சாபமும் தீருமென்றேனவர் பொற்பாதம் பட்டிடப்போகுமெனறார், (95)

வேதியனிம்முறை சொல்லிவணங்கியே வேறோர்வனத்திற்றுன்நடக்க, ஆதிமுன்னேனை மனதிலெண்ணியவர் அப்புறந்தானே நடக்கலுற்றார். (96)

அந்தவனம்விட்டுத் தூரவழியாக அப்புறயோசனை தான்நடக்க, விந்தையாக அசுவமுகப்பெண்ணாள் வில்விஜயன்தன்னைத்தானடக்க. (97

விசயனைக்கையாலே தீண்டிடவேயந்த மெல்லியாள் சாபமும்
தீர்ந்திடவே, அசுவமுகம்விட்டுத் தன்னுருவாகியே ஐவரைப்
போற்றி நடக்கலுற்ருள். (98)

அடிதொழுதப்புறம் நடக்கையிலேயனக் கசுவமுகமானதே
தெனவே, வடிவுள்ள காளிமுனி மனைவினனே மாகாளியென்றமே
யென்பேராம். (99)

அந்தரங்கமாக வேறுமுனியிடம் ஆசைகொண்டே னதைத்
தானறிந்து, சிந்தைவெகுண்டென்னை யசுவமுகமாக செய்துவிட்
டாரையா யென்கணவன். (100)

மெய்யன்கணவன் அடிபணிந்தேயிந்த வீண்சாபந் தீர்வது
யெப்போதென்றேன், ஐவரும்வைகுண்டம் போகையிலே கண்
டால் அருஞ்சாபந் தீருமெனவுரைத்தார். (101)

அன்றுரைத்தப்படி தீர்ந்ததென்றுபோக ஐவர்வெகுதூரம்
போகையிலே, மன்றலும்நல்ல மறலியாற்றன்கரை வந்துகண்டே
ஐவர் நிற்கையிலே- (102)

ஆறுபெருகிவரக்கண்டே வீமன் அப்புறம் ஐவரைத் தாண்ட
வென்று, பாருலகாண்ட தருமர்விசயனை பக்கமிருதோளில் தூக்கி
வைத்து. (103)

ஐவரின்தேவி யழியாதகன்னியை அடைவாயிடையிலே தா
னிடுக்கி, பையநகுலசகாதேவர்தன்னையும் கையிலேதூக்கி நடக்க
லுற்ருர். (104)

அப்புறம்வீமன் பெருகிவருகின்ற ஆற்றிலிரங்கி வருகையிலே
செப்பரிதாகிய மறலியாறுமின்னு மிப்படிபெண்ணுருவாகியதே.

கருணைமிகுந்திடும் நாகமதுநீயும் கங்கைநீரானதே னென்று
ரைக்க, அருணமுனியிட பெண்சாதிநானுகும் ஆசைமபல்கொண்டு
வேறேயொரு. (106)

பத்தாவைக்காணுமல் சோரத்தனமொரு பாரமுனியொடு
சேர்க்கையுமாய், மெத்ததவம்புரி யென்கணவன்கண்டு வற்ருநீத
ராகச் சாபமிட்டான். (107)

வெய்யகொடுஞ்சாபம்பொல்லாது தீர்ந்திடும்வேளையெப்போ
தென்றுநான்கேழ்க்க, தையலேயுன்சாபம் தீரவென்ருலிங்கே தர்
மர்வரத் திருமென்றுரைத்தார். (108)

சென்றுவுங்களிட பாக்கியத்தால்சாபம் தீர்ந்ததென்றேமங்
கைதான்போக, அன்றுமொழிப்படி மாயனைத்தேடியே அப்புறம்
ஓர்தினம் போகலுற்ருர். (109)

போரதடத்தினிற் றுர்நிமித்தங்கண்டு போம்பொழு தைவ
ரும் துரோபதையும், காருறும்பூங்குழல் துரோபதையாளுக்கு
கனத்த அதிசயமுண்டதுவே. (110)

மெய்பதற அம்மன் கைபதறமுகம் வேர்வையதாகி விறு விறுப்பாய், தையல்நடையுமே தள்ளாடிச்சிவன் தன்னைநினைந்து புலம்பலுற்றாள். (111)

பண்ணுந்தவஞ்செய்யும் புண்ணியமோவண்ணம் பத்திரகானகம்தன்னிலேதான், கண்ணுமிருண்டு வருகுதையோவென்று கார் மேகவண்ணனைத் தான்தொழுதாள். (112)

காதுவதாயெந்தன் சந்துவலிக்குது காட்டிலென்னை மெள்ளக் கூட்டிவா, மூந்திவிதிப்படி வந்துதென்றேயம்மன் சிந்தையிலெண்ணியே தான்விழுந்தாள், (113)

புட்பவிமானமும் வந்திடவேகூடு போட்டு வைகுண்டவழி சென்றாள், அப்போதேகூட்டை யெடுத்தடக்கிப்பின்னும் ஐவரும் கூடிநடக்கலுற்றார். (114)

தூயசிவனடி தானினைந்தேதர்மர் தோத்திரம்செய்து துதிக்கலுற்றார், ஆயாசமாகத் துரோபதை செத்ததே னண்ணாவென்றே வீமன்தான்கேட்க. (115)

செறுக்களஞ்செய்து வருகையிலேநம்மை சேர்ந்தபடையும் பெருகையிலே, அருக்கன்மகன்மீதி லாசைகொண்டாளிவள் ஆனதாலிந்தச் சோரமென்றார். (116)

மனதினிற்றேடியே தம்பியைவர்கூட வரும்வழிதூர வருகையிலே, சினத்துடனேயொரு சிங்கம்வந்தேயவர் சிந்தைகலங்கவிட்டிடவே. (117)

சிங்கத்தைக்கண்டுமே ஐவரடுத்திட சீறியேவாய்நெடு மூச்செறிந்து, பொங்கியவரை விழுங்கையிலேவீமன் செங்கையால்வாயைக் கிழித்துவிட்டார். (118)

வாய்கிழித்தவுடன் நான்மறைவேதியன் வடிவாகக்கண்டனர் தாமதுரை, மாயன்செயலோ ரிஷியிடத்தில்வந்த மகாசாபமேதோ வுரையுமென்றார். (119)

சொல்லுமென்றேதர்மர் தான்கேட்கஅவன் சொல்லுவான்மாய ரிஷிதனக்கு, வல்லவன் பூசைக்குப்பூவெடுக்கச்சிங்க வந்தடிக்கச் சீவன்தான்மடிந்தேன் (120)

தோஷமுமுங்களைக் கண்டதினால்ரிஷி தொல்லுருவாகினேனென்றுரைத்தார், மாயவன்சொல்லை மனதிலெண்ணியைவர் வந்திடவேறே வனத்திடையில். (121)

நேயமாயென் முனிவனைக்கண்டார் நின்றடிபோற்றியே தெண்டனிட்டார், தெண்டனிட்டவரை மாமுனியுங்கண்டு சீருடன் வாழ்த்தி யிருங்களென்றார். (122)

வாரும்துரைதர்ம அத்திபுரம்விட்டு மாவனந்தாண்டி வெகு [illegible]ராம், பாருளசீமையும் பூமியும்விட்டிங்கே பஞ்சவர்தந்திடு [illegible]திசொல்வீர். (123)

சீமையுஞ்செங்கோல்வணிமுடியும் பரிட்சித்தனுக்கேபட்டங் கட்டிவைத்தோம், பாரினையோரடியாலளந்தமாயன் நீங்கவேவைகுந்தம்போரோமென்றார். (124)

ஏனமுனியவர் தான்கேட்டுநீங்கள் என்முகம்பார்க்கப்பசிதீரும், ஆனவைகுண்டம்வெகுதூரம்நீங்கள் அத்திபுரத்திற்குப்போங்களென்றார். (125)

சிந்தையில்வேறே நினைப்பதுண்டோ யெங்கள் சீமைபூமையினில்ஆசையுண்டோ, மந்திரரூபியாம்மாலயன்வாழ்திரு வைகுந்தந்தேடியேபோரோமென்றார். (126)

புந்திமகிழ்ந்துமுனியறிந்துஇவர் போவதுநிச்சயமாயெனவே, இந்தவழிதானே தேவர்கள்காண்பது என்றுமுனியும் அனுப்பிவிட்டார். (127)

மாலோனைத்தேடி மனதிலெண்ணிஐவர் மற்றுமொருவனம் போகையிலே, ஆலத்தைப்போலொரு வல்லரக்கிவழி அண்டிருந்தங்கேபடுத்தனளே. (128)

போரவழியைத்தடுப்பதென்னவாயில் புகுந்துகிழித்துவெளியேவர, ஆருந்துதிக்கின்றஇலக்குமியைப்போல ஐவர்முன்னாகவே நின்றனளே. (129)

ஏதுமாதேநீ யிந்தவேஷங்கொண்டதெப்படியென்று தான் கேட்க, வாதுதவபோகமாமுனிதன்மகள் மாசிவமுனியைகைகொண்டேன். (130)

அம்முனியாரிடசொல் தவறவென்னை அன்றேயரக்கியாய்ச்சாபமிட்டார், செம்மையாய்நீங்களும் இங்கேவரவுங்கள்சித்தத்தினால் சாபம்தீர்ந்ததென்றாள். (131)

அன்றேயதனையனுப்பிவிட்டு ஐம்பத்தாறென்றயோசனை தான் கடந்து, சென்றேவழியெங்குங் காணுமலைவர் சிந்தைமயங்கக்கணபதியாய். (132)

பிள்ளையாரங்கேவழிகாட்டஅவர் பொன்னடிபோற்றி அடிவணங்கி, வள்ளல்தூருவாச மாமுனிபட்டணம் வந்துகண்டாரைவரப்போது. (133)

காருவளம்பதிநேர்த்திகளும்கனி கண்டாரம்பொங்கும் பாததிகளும், கோபுரம்கொத்தள வீதிகளும்சுற்றிக் கோட்டையுங் கண்டுமனமகிழ்ந்து. (134)

தஞ்சமென்றேதூருவாசமுனியிட தன்னடிபோற்றி மிகவணங்கி, அஞ்சலென்றே தானுரைக்க ஐவரையுமவர் பார்த்துரைப்பார். (135)

பத்திசேரைவராம் நீங்களுமேயிந்த பாதைவழிவனந்தாண்டிவர, அத்திபுரநாடு சேனைதளம்விட்டு ஐவரும்வந்திட்ட சேதியென்ன. (136)

மாமுனியேதுருவாச ரிஷியெங்கள் வையகத்தாசை மறந்து
விட்டு, பூமியையோரடியா ளளந்தமாயன் பொற்பாதம் காணவே
போரோமென்றார். (137)

போரோமென்றுசொன்னபஞ்சவரே யுங்கள் புண்ணியபூர்வீ
கஞ்சொல்லுவன்கேள், பாராளுங்குந்தியுந் தாயுந்தகப்பன்வெள்ளை
பாண்டுமகாராசன்மற்றதுங்கேள். (138)

கன்னிமாமண்டபத்தேயிருக்கத்தெய்வக் காரணமாய்ப் பிண்
டம்வந்ததுவும், அன்னதினால்நீங்கள் அத்திபுரத்தை அரசாளவந்
தவழிமுறையும். (139)

அண்டர்பணிந்திடும் செங்கண்மாலேயுங்கள் ஐவரைக்காக்
கிறேமென்றதுவும், மண்டலந்தன்னிலே நூற்றுவரைக்கொன்ற
மாயமுஞ்சொல்லக்கதைமுடித்தார். (140)

வாஞ்சையாய்வைகுண்டம் போகவென்றேமுனி வாழ்த்திவி
டையுங்கொடுத்திடவே, பூஞ்சோலைமாவனந் தனனில்வந்தாரந்த
பூங்காவில்மாகாளிகோவில்கண்டார். (141)

மாகாளிதன்னைமிகவணங்கியவள் வாழ்த்திவிடையுமே தான்
கொடுக்க, வாகானபஞ்சவர்பத்தாறுயோசனை வந்துவிட்டா ருச்சி
மாமலையில் (142)

பஞ்சவர்வந்திடவல்லரக்கர்கண்டு அஞ்சாமனின்று வழிமறித்
தார், நெஞ்சில்பயமற்று வந்தவராரென்று கோரகச் சண்டையுஞ்
செய்தனரே (143)

கண்டுபலவீமன்வல்லாக்கர்களைக் கையினால்வாரி யெறிந்துவி
ட்டான், வண்டரக்கனெழுந்து முன்னேனடைகொண்டு வெகுதூ
ரம்போகையிலே (144)

போரவழிதான் தலையத்தர்மர் புகலுவார்முன்கதை யொன்
றெடுத்து, நேரேவெகுதூரம்போயனுப்பாயங்கே நின்றேரேயாலம
ரத்தடியில் (145)

ஆலடிதன்னிலேவீற்றிருந்தாரைவர் ஐயன் துணையெனவே நி
னைந்து, மாலோன்கருடனைப் போயங்கேயைவர் மனதையறிந்துநீ
வாருமென்றார் (146)

துய்யகழுத்தினில் வெள்ளையதாயவர் தோடுசிறகு சிவப்புற
வே, வையந்துதிக்கவேவட்டமிட்டோடியே வந்திட்டாரங்கேகாம
னுமே (147)

தேட்டமுடனவர் கூட்டமதாய்வந்த செய்தியென்னவென்று
தான்கேட்க, வாட்டமில்லாத்திரு மாலழகர்வாழும் வைகுண்டம்
போகிறோமென்றுரைத்தார் (148)

நீங்கள்திருப்பதி காண்பீர்களோயிது நேரல்லவுங்களூர்போ
ங்களென்ன, தாங்காதவார்த்தைநீ சொல்லாதேசாமி சத்தியம்நாங்
கள் மறப்பதில்லை (149)

ஐவர்மனதை அறிந்துகருடனும் ஆரும்வைகுண்டமே போயுரைப்பான், மெய்யவனைக்கண்டு தோத்திரங்கள்செய்து வெளிப்பட்டாரங்கே வெகுதூரம். (150)

தூரவழியவர் தானடக்கத்தம்பி துய்பசகாதேவன் மெய்யசந்து, நேராய்வழிநானே போவதில்லையெந்தன் நெஞ்சுபதைக்குதென் றேயழுதான். (151)

கண்கள்சுழன்று விழுந்திடவேயவர் கண்டுமடியினில் தூக்கிவைக்க, தங்கவிமானமும் வந்துநிற்க அவர் தம்பிசகாதேவ னேதுரைப்பார். (152)

போரேன்பட்டணம் அழுகாதேஐயாவே புனத்தினில்புரண்டு விழுகாதே, நாரணன்தோத்திரம் செய்துகொண்டேயுயர் நல்வழி வைகுண்டஞ் சேர்ந்ததுவே. (153)

தம்பியையங்கே யடக்கஞ்செய்து அண்ணல் தன்னிடத்தே வீமன் தான்கேட்க, நம்புவிசண்டை முகூர்த்தமிட்டா னதினாலே யிவன் செத்த தோஷமென்றார். (154)

நால்வருங்கூடி யொருமையதாகவே நாள்பேசிட நடக்கையிலே, மால்தயவாகவே சுந்தரக்கந்தர்வ மாமலைதீர்த்தமும் ஆடினரே. (155)

தீர்த்தங்களாடி நடக்கையிலேயங்கே சேரிழைமார்கள் எதிரில்வந்து, பார்த்தங்கே நீங்களும் யாரெனவேநாங்கள் பாண்டு மகாராசன் மக்களென்றார். (156)

தாழ்வில்லாப்பாக்கியர் தன்னைவிட்டுநீங்கள் தான்வந்ததேதென் றவர்கேட்க, வாழ்வைமறந்தெங்கள் மால்பதத்தைத்தேடி வைகுந்தம்போகிறோ மென்றுரைத்தார். (157)

பாதைவழியாக நாங்கள்போரோம் தடைபண்ணவேண்டாமென்று தானடந்தார், ஏகிற்பலவனங் கடந்தோரெழுபதுயோசனையப்புறம் போகையிலே. (158)

தாகமுற்றேதர்மர் தம்பிநகுலனும் தான்மயங்கிவாடி வீழ்ந்தனனே, அந்திபகலு நடந்திடவே மன்னரக்கான துணையாய்த் தொடர்ந்திடவே. (159)

எந்தலைநோகுது சந்துவலிக்குது ஏகன்விதிப்படி தானெனவே, வந்திடுங்கால மிதுதானோநல்ல மாயவர்செயல்தா னிதுவாமோ. (160)

என்றுபுலம்பி நகுலனும்பூமியில் ஏங்கிவிழுந்து மறித்திடவே, அன்றுவிமானமும் வந்திடவேவுயிர் ஆனதுவைகுந்த வான்பதமே. (161)

தம்பிநகுலனைத் தானடைக்கித் தர்மர் தாயகமாய்ச் சொல்வார் வீமனுக்கு, அம்புவிதன்னிலே கற்றவித்தையொன்றும் ஆருக்குஞ்சொல்லாததோஷமென்றார். (162)

அப்படித்தர்மரும் சொல்லியேதானங்கே முப்பதுயோசனை தான்போக, செப்பரிதாகிய ஆலடிதன்னிலே தேறியிருந்து இளைப்பாறி. (163)

ஆலடிதன்னிலே வீற்றிருந்தார்தர்மர் அங்கோர்முனிபாதம் தெண்டனிட்டு, சாலவெழுபது யோசனைதூரமும் தானேநடந்தார் வழிகூடி. (164)

தொடர்ந்துவந்துபோன துரோபதையையெண்ணி தூரவழியவர் போகையிலே, அடர்ந்தபெருவனக் கானகத்தேயொரு ஆனையும்வந்தெதிர் தோன்றியதே. (165)

ஆனையுன்முன்வந்து ஆர்ப்பரிக்கவீமன் ஆவித்ததன்கழுத்தே பிடிக்க, தானேயுருமாறி வேதியனும்வரத் தர்மருமேதென்று கேட்டனரே. (166)

சகத்தினிலேஅந்த அகத்தியமுனிக்குநான் சீஷனாகியவர் பூசனைக்கே, அகத்தியம்பூங்காவிற் பூவெடுக்கரெண்டு ஆனைகளங்கே புணர்ச்சிகண்டேன். (167)

பூவெடுக்காமலே நின்றுவிட்டேனந்தப் பூசைதப்பியவர் கோபமதாய், ஆவலினாலென்னைக் கண்டபோதேநீயும் ஆனையாய்ப்போவென்று சாபமிட்டார். (168)

சாபமுந்தீர்வது எப்பவென்றேனிது தான்வழியாகவே தர்மர்வர, பாபமுந்தீர்வதுநீர் போகவென்றுருங்கள் பாக்கியத்தாற் சாபந் தீர்ந்ததுவே. (169)

போரேனையாவென்று ஐயர்நடந்திட போனதேயவ்வனந் தூரவழி, வாராதமூங்கில் வனந்தீர்த்தமாடி வந்துசுகமுனியைக் கண்டார். (170)

கண்டுபணிந்து முனியிடத்தேவழி காணவிடையுமே தான் வாங்கி, அண்டர்பிரானை மனதிலெண்ணி அவர் ஐம்பதுயோசனை தானடந்தார். (171)

வையமறியாத கானகத்தேவெகு மாதவஞ்செய்தே ஜடைமுடியும், தையலருசி முனைத்தவமுங்கண்டு தர்மருந் தம்பியர் தான்வணங்கி. (172)

ஆண்டியென்றவேஷம் பூண்டதென்ன எங்களாச்சிமரந்தனில் வந்ததென்ன, வேண்டும்வரம்இனி நாம்கொடுப்போம் வந்தவிந்தையைச்சொல்லென்று கேட்டிடவே. (173)

பிள்ளைவரமொன்று கேட்பதில்லைபெற்ற பிள்ளைபெண்சாதி மேலாசையில்லை, மன்னவனென்பேர் தருமனம்மாநாங்கள் வைகுந்தம்போகவரங்கொடுப்பாய். (174)

நல்லதென்றேவிடை தான்கொடுத்தாரவர் நன்றானசோலைமலையேறி, வல்லபவளமலைமுனியைக்கண்டு வாங்கிவிடையும் நடக்கலுற்றார். (175)

224788

அங்கோர்வனத்தில் அகத்தியன் புலத்தியன் [illegible] அடிபணிந்து விடைவாங்கி, தங்கும்வசிஷ்ட முனிவர்ராசரிஷி தன்னால் விசுவா மித்திரன் தன்னைக்கண்டார். (176)

மூவர்ரிஷியே சரணமென்றே தர்ம[illegible]யே தெண்டனிட்டு, தேவரறியவே வைகுந்தம்போவென்று செப்பி விடைகொடுத்தாரே. (177)

உல்லாசமாக வழிநூறுயோசனை உன்னிதமாக நடக்கையி லே, சோலைவனமும் அதிசயமுங்கண்டு சொல்லியே தர்மருந் தம்பி யுமாய். (178)

சாலவேபங்கய வாவிதனில்வர தங்கியிருந்தார் தனிப்பாறி, யெங்கணும்பாதை வழிகுடி இந்த்ர கோமலையே வருகையிலே.

இந்தவனத்தில் தம்பிமார்களுடன் தர்மரும் கதைசொல்லிப் போகையிலே, வெங்கண்சிவந்து வால்முருக்கியொரு வேங்கையு முன்வந்து தோன்றியதே. (180)

தோன்றியவேங்கையை வீமன்கண்டுவெகு சூரத்தினாலதை வாய்கிழிக்க, தோன்றியவேங்கை யுருமாறிஜயர் போலுருவாகி நடந்ததுவே. (181)

கெற்பவழிதூரம் எண்பதுதாண்டியே கேதாரபாதை வழித னிலே, அற்புதமான குரிஞ்சிவனத்தினி லெங்கோர்முனிவ னடி தொழுதார். (182)

வணங்கிமுனிவை யனுப்பிகொண்டுவெகு வாகாயுச்சி மலைக டந்து, இணங்கியயோசனை நாலுவிட்டேயவர் ஏகியேயோர்வனம் வந்திருந்தார். (183)

சென்றுவிழுந்த அர்ச்சுனன்பொன்மயத் தேரினில்வைகுந் தம் போய்ச்சேர, மன்றினிற்போர்வீமன் தானழுகத் தர்மர் மார் போடணைத்து மிகவழுதார். (184)

அழுதவிஜயனைத் தானடக்கியவர்க் கானசடங்கு மிகநடத்தி, தொழுதுவராக மலைகடந்தேவீமன் சொல்லுவான் தர்ம ரடி தொழுது. (185)

வில்விஜயன்போன தென்னகுற்றமென்று வீமனுங்கேட்கத் தானுரைப்பார், அல்லவடாதம்பி போர்வீமாகேளும் சொல்லு வேன்கேளும் அதின்விபரம். (186)

வாயத்தசமரினிற் போர்க்களத்தேநம்ம மாயவன்தேரூர மே லிருந்து, சூத்திரமாக பரிநடத்தசுவாமி துணைமலர்ப்பாதங்கள் நொந்ததுவே, (187)

காயாம்புமேனியின் தேரூரிவன் கால்தனைநீட்டியே மேலி ருந்து, மாவாதவீரன் அருச்சுனனுமந்த மாபாவத்தாலிங்கே செத் தந்தென்றார். (188)

அவ்விதஞ்சொல்லி அழுதவாவிதீர்த்தம் ஆடியேதர்மர் இருவருமாய், இவ்விதம்பேசியே தொண்ணூறுயோசனை யேகிவழியும் நடந்தனரே. (189)

சாயாம்புமேனியர் மேகவர்ணவுந்தன் கருணையாலெங்களைக் காக்கவென்று, ஆயாசம்கொண்டு இருவருமேவா அங்கேவாராகமுந் தோன்றியதே. (190)

வந்திடும்பன்றியைத் தான்பார்த்து அங்கே மாபலத்தாலே வதைத்திடவே, செந்தமிழ்வேதிய னாகிநிற்கஇந்த செய்கையென்னவென்று தான்கேட்டார். (191)

தந்திரகராமேக மாமுனிவேள்வி கடுத்ததினால்வந்த சாபமிது, உந்தன்கிருபையாற் சாபந்தீர்ந்ததென்று ஓடிவிட்டானந்த வேதியனும். (192)

இந்திரகிரியுடன் நாமகிரிமலை இத்தலந்தாண்டி யவர்போக, உந்திருநூறு ஐம்பதுயோசனை உன்னிதமாக நடக்கலுற்றார்.

வஞ்சமலையுங் கடந்தனரேறிவர் மற்றுமிருபது யோசனையும், மிஞ்சுபுகழ்த்தர்மர் தானடக்கநல்ல வீமனுக்கங்கே யசதியதாய்.

தம்பியர்நால்வரும் துரோபதையும் இந்த கார்வனத்தே நாங்கள் கூடிவர, கும்பிவனத்தினி லொண்டியாகவிட்டு கொண்டோமென்றேவீமன் தானழுதான், (195)

அண்ணல்முகத்தைப் பார்த்தழுதான்வீமன் ஆருந்துணையில்லையண்ணாவென்று, கண்ணன்செயலோ அரன்செயலோ என்ன காரணமோவென்று தானழுதான். (196)

வீமன் அழுதுமே கண்கள்சுழன்றங்கே வீழ்ந்து வைகுந்த பதவிகண்டான், ஆமெனும் வீமனுந் தர்மர்கையாலே அலறியெடுத்து மடியில்வைத்தார். (197)

தூக்கியெடுத்து மடியில்வைத்தார் தர்மர் சோபிதமாக முகத்தைவைத்து, தாக்குப்பலங்கொண்ட போர்வீமாவுந்தன் தாஷ்டிகமெங்கே போயினதோ. (198)

சுந்திருவன்வந்து துரோபதையைக்கொண்டு கானகம்போகத் தொடர்ந்துசென்று, மாந்துளிர்மேனியாந் துரோபதையை மீட்டுவந்தபலமெங்கே யென்றழுதார். (199)

ஆற்றினிலெங்கள் ஐவரைத்தூக்கியே அக்கரைகொண்டுமே வந்திறங்கி, சேர்த்தியேயெங்கள்முன் தானடந்துவந்த செய்கையெங்கேயென்று தானழுதார். (200)

பன்றிதூரத்தி வருகையிலேயெங்கள் பக்கத்துணையாக நீயிருந்து, வெற்றியாயெங்களைக் கூட்டிவந்தாயன்று மேலோகஞ்சென்றாயே இத்தினத்தில். (201)

ஆனைமிரட்டியதட்டிவரநீயும் அஞ்சாமல்முன்னின்ற ஆண்மையெங்கே, கானகத்தில்வந்து சிங்கமெதிர்த்திடக் கையாற்கிழித்தபலமுமெங்கே. (202)

ஆரிருந்தாலெனை நீயிருந்தாலெனக் கானதுணையென்றுநானிருந்தேன், பாரிவனந்தனிலொண்டியாய்விட்டாயே பாவியென்றே தர்மர்தானழுதார். (203)

தானேவனத்தினிலே யழுதார்தர்மர் தாரணிமீது விழுந்தழுதார், சேனைகளத்துறை வீமனைக்காட்டினில் சேர்த்தியேயப்புறம தானடந்தார். (204)

பாரினில்வாழும் பருவரையைச்சேர்ந்த பன்றிகடமானேபள்ளினமே, நேராகவென்னுடன் தான்பிறந்தவீமன் நேர்தடத்தேவரக்காணீரோ. (205)

மையணிசண்டற்கு மைத்துனனாய்வந்த மாயவன்றன்பாதங்காணவென்று, வையம்புகழ்ந்திடும்விஜயனிந்தமார்க்கம் வாரநீங்கள்காணீரோ. (206)

அன்னமேதாராவே பூங்குயிலேயிந்த ஆணழகர்வரக் காணீரோ, சொன்னமொழி தவறாதகுலனும் சொர்க்கம்போகும் வழி காணீரோ. (207)

பார்த்துமிரட்டிய சிங்கங்களேயிந்த பாரினில்வாழும் புலிகளே, சாத்திரந்தேர்ந்த சகாதேவனும் இங்கே தங்கிவரநீங்கள் காணீரோ. (208)

கஞ்சாமலர்மதுவுண்டிடும் வண்டுகாள் காவினில்வாழ்ந்திடும் தும்பிகளே, பஞ்சவர்நாயகிதுரோபதையாளிங்கே பாரவழிதனில் காணீரோ. (209)

தேடிவழிதனில் சிந்தைநொந்துதர்மர் செங்கண்மால் பாதந்துணையெனவே, நாடியேவைகுந்தபாதைவழி கூடிநாயகனங்கே கடந்தனரே. (210)

ராஜனுமங்கே நடந்துவரப்பச்சை நற்பரிதேரேறும் சூரியன் போய், நேசமதாயொரு ஆலடிதன்னில் நித்திரைவந்து துயின்றனரே. (211)

நித்திரைசெய்யுந் தர்மரைக்கண்டுமே நேராசனுந்தலைநாகம்வந்து, பத்திவிழுங்கையில்மாயவனாங்கே பார்த்தேதிருவுளந்தானினைந்தார். (212)

கங்குல்விலகிக்கதிரோனுதித்திட கைகுவித்தேயவர்தெண்டவிட்டார், அங்கேபெருவழி யொன்பதுயோசனை அப்புறம்போக நடக்கலுற்றார். (213)

வருணமலைதன்னைத் தான்கடந்துதர்மர் வாரவழிதனில் முமமலையை, சிறுகடல்தன்னிலே சக்கரம்வாரியே சிந்தைதெரியவே தர்மர்கண்டார். (214)

வசரியெறியவே தர்மர்கண்டுமாயன் வாய்த்ததுணையென்று தானறிந்து, பாரவழிநூறு யோசனை தூரமும் பாங்கான அஞ்சன மாமலையும். (215)

அஞ்சனமாமலை பின்போட்டுதர்மர் அப்புரம்போகப் புருஷமுனி, அஞ்சும்வழிதனில் ஒண்டியாகவிந்த சோலியென்னவிங்கே சொல்லுமென்ன. (216)

ஒண்டியாய்நீஇங்கே வந்ததென்னவுங்கள் ஊரென்னபேரென்னசொல்லுமென்றார், தெண்டிரை சூழ்ந்திடு மத்திபுரமெங்கள் சீமையென்பேரும் தருமரென்றார். (217)

தம்பியர்நால்வருமுன்னேபோனாரங்கே சாமிமால்பாதமேமுன்காண, அன்புவைத்தேவிடை தாருமென்னமுனி யாச்சிரமத்திலடிதொழுதார். (218)

ஒப்பிவிடைதரப் போரவழியிலே ஒருயோசனை தானடந்து, தொப்புமுதிர்ந்துபழமுதிறும் அந்தக்கோணமலையுமே தான்கடந்தார். (219)

செயமிகுந்துரை தர்மருமேயங்கே சிவன்மலையைக்கண்டு பூசைசெய்தார், நயமிகுவைகுந்தப் பாதைவழிதனில் நன்றாகப்பொய்கையில்நீராடி. (220)

அன்புடனேசிவயோகபட்சிதனை அடிகள்தொழுது பணிந்திடவே, தென்புடன்தேவர்கள் கூட்டங்கண்டேயவர்சேவித்ததூரம்நடக்கையிலே. (221)

வந்தகருமான கருணைநதியினில் வந்துமேநீராடியப்புறத்தில், சந்தரவிந்தகிரியேமகிரிமலை தாண்டியேயப்புறம் போகலுற்றார்.

கங்கைமலையும் கடந்துசெல்ல வெருகல்லுமலையுமேதான்நடந்தார், பொங்குபுகழ்நாக வல்லியாற்றுக்கரை பொய்கையிலேதர்மர்வந்திருந்தார். (223)

வந்திடுந்தர்மர் மனமறியநல்ல மாமறலிமறுவேஷங்கொண்டு, குந்திகடக்குஞ் சுணங்கனைப்போல்வர கூடவேஅக்கரை சேர்த்துமென்று. (224)

மாயன்செயலென்று அக்கரைதாண்டவே மார்போடணைத் தார்புழுச்சொரிய, தாயகமாகத் தலைசுமையுங்கொண்டு தர்மரும் அக்கரைதாண்டலுற்றார். (225)

ஆறுகடந்துபின் போகையிலே அவர் அன்னலட்சுமிமலைதானேறி, நேராயவருபோகத்தெய்வமலைதன்னை நின்றங்கேக்கண்ணாரக்கண்டாரே. (226)

மாங்கனிதேக்கனி காய்த்திருக்குமங்கே மாதளைமல்லிகைபூத்திருக்கும், தாங்காதவாழை குலைசாயுமங்கே தாழைமலர்வாசமேபாயும். (227)

மாமரந்தன்னிற்குயில்கூவும் அங்கே மந்திரங்கள் தன்னை மரம் பாயும், பூமரந்தன்னிற் கிளிப்பாடும் அந்த பூங்காவில் அன்னங் கவிபாடும். (228)

தேவர்களங்கே சிறந்திருக்கும்நல்ல தேவேந்திரராஜன் கொலுவிருக்கும், ஆவலாய்நின்றவர் தெண்டனிட்டேதேவர் அனைவர்க்குந் தாழ்ந்தங்கே போற்றிசெய்தார். (229)

போற்றிசெய்தர்மனைத் தான்தழுவிநல்ல பூலோகத்தர்மருந் தானிருந்தார், எற்றிப்பணிந்திடும் மன்னனைக்கூட்டி ஏகியேகேதாரம்தானடந்தார். (230)

தென்னவனிந்திரன் முன்னடக்கத் திருமாநதிகண்டவரேது சொல்வார், மன்னவாவின்னதி யாடிடவேயுந்தன் மாபாவந் தீருமென்றேயுரைத்தார் (231)

முந்தியபாரத விந்தைப்பாவந்தீர மூழ்கிநீர் வாருமென்றே யுரைத்தார், தந்தவரப்படி தர்மதுரைமூழ்கி தங்கமிறமாக நின்றனரே. (232)

நின்றிடுந்தர்மனைத் தேவர்கண்டேயிது நிச்சயம் வைகுண்டம் போரதென்று, மன்றல்செரிந்தநல் மறலியைக்காணவே வந்தங்கே கோபுரவாசல்கண்டார். (233)

பொன்னணிமேடையும் பூவுகள் வேய்ந்திட்ட பொற்பதச் சோடினைவாசலத்தில், நன்னகர்வீதி வழக்குவாசல்தன்னில் ராஜன் துரைதர்மராஜன்வந்தார். (234)

தேவரகளெல்லோரு முன்னடக்கநல்ல தேவேந்திரராசன் பக்கல்வந்தார், பாவையராலாத்தி ஏந்திடவேயந்த பட்டணம்வந்து புகுந்தனரே. (235)

வீதிகளெங்குமே போதிகளும் அங்கே மின்னும் வச்சிரமணி தூணுகளும், மாதர்கள்கையாலே கோலமிட்டதிண்ணை மாடங்களும் சித்திரகூடங்களும். (236)

இந்திரவானவர் கூட்டமதாய்வர எல்லோருமாமுனிமண்டபத்தில், வந்தெமராஜன் கொலுவிருக்கும்நல்ல மாமணிமேடையில் வந்துகண்டார். (237)

கண்டங்கேதர்மனும் தெண்டனிட்டேயமன் கையிலெடுத்து மடியில்வைத்தான், எண்டிசைவாழ்த்துந் தர்மதுரைநீயும் என்பதியாளவேவேணுமென்றார். (238)

இப்பதியாளவேவந்ததில்லைஇந்த எண்டிசைமேற்புவி யாசையில்லை, நற்பதியாகிய வைகுண்டம்போகவே நாயகனேயென்னை அனுப்புமையா. (239)

பச்சைமேகவண்ணன் சொல்மறுத்தேயிந்த பாரினிலெங்கு மிருப்பதில்லை, வச்சிரமார்பதத் தையரேயென்னை வைகுண்டம் போகவிடைகொடுப்பீர். (240)

செய்யுமறவியூர்தான்கேட்டுஅவர் சிந்தைமகிழ்ந்தபின்னே து
சொல்வார், அய்யனே உந்தன் குருவைக்கொல்லமுன்னே ஆனையத
மென்ற பொய்தனக்கு. (241)

பொய்யுரைவிங்குள்ள வாறுநரகமும் போயக்கேபாரென்று
தூதனுப்ப, மெய்யன் தன்னை தர்ம ராஜனைக்கூட்டியே வித்தையாய்த்
தூதருமேதுசொல்வார் (242)

வஞ்சனையாய்ப்பில்லி வைக்கின்றபேர்க்கிது வாய்த்தபெருங்
குட்டையாறுமென்ன, நெஞ்சறயேழைகளைக் கெடுத்தோர்க்கிது
கோரானதுண்டு விலங்கிதுபார். (243)

வேலைக்குஆமென்று நாளைக்கென்றேதடம் விட்டிடும்பேர்க்
கிது அக்கினித்தூண், வாணுமவிலையைக் கொடுத்தவர்க்கே காய்
ச்சிவைப்புமிருப்பு மூக்காலியென்றார். (244)

தீரும்வழக்கைஅழிவழக்காகவே செய்குவோமென்று மனதி
லுன்னி, வீருடனேசொன்ன பேரைப்பிடுங்கிட மேலும் இருப்புக்
குறடதுபார். (245)

ஈயுங்கொடையைத் தடுப்பதற்கேவீச எமன்கைபாசக்கயிறது
பார், வாயாரவேபிழைச் சாட்சிசொன்னோர்க்கிங்கே வாய்த்திட
கட்டுங் கயிறதுபார். (246)

மெத்தப்பவிசாகக் குற்றங்கள்செய்தபேர் மேலிட்டெரியவே
சூலங்கள்பார், குற்றமில்லாதாரைக் குற்றஞ்சொல்வோரிங்கே
கூட்டியடித்திடுஞ் சாட்டையப்பா. (247)

தந்தைதாய் வாசல்வர மூந்திச்சினத்துமே தாண்டிடும்பேர்க்
கிடு தூண்டியும்பார், வந்துசெய்வோர்கூலி பிந்திக்குறைத்திடும்
மாந்தரையாட்டவே செக்கிதுபார். (248)

காமத்துரோகிகள் சாமத்துரோகிகள் கடும்பாவத்தார்க்குங்
கழுவதுபார், மேன்மைக்குருமொழி மேகத்தைவிட்டோரை வீசி
யடிக்கப பிரம்பதுபார். (249)

பஞ்சையைக்கையால் அடித்துப் பறித்தோர்க்கு பார்க்குழி
யினில் அட்டையைப்பார், வஞ்சகத்தார்க்கிது அக்கினியாலது
வாய்த்தநரகக்குழியிதுபார். (250)

ஒக்குநாகங்களாறு கண்டேரிது ஒன்றுக்குயோசனை எழுமுண்டு
நீக்குகரத்தி லெத்தனைவைத்தார நேராகச்சொல்லமுடியாது. (251)

வையம்புகழ்ந்திடும் வைகுந்தந்தேடியே வந்திடுந்தர்மதுரை
யேநீர், செய்யுஞ்சமரினில் பொய்யென்றுசொல்லவே கேட்டநர
கங்கள் காட்டினமே. (252)

ஏழாநரகத்தில் போரதடத்தினி லெட்டியேபார்த்தாரே தர்ம
துரை, ஆழாப்பழகன் துரியோதனன்படும் ஆக்கினைகண்டேயழுக
லுற்றார். (253)

அண்ணன்தம்பியவர் நூற்றுவருமங்கே அட்டைக்குழியில
ழுந்துவதை, கண்ணால்கண்ட நூற்றுவர்தங்களைகைதூக்கியங்கே
யெழுப்புமென்றார். (254)

மாபாவஞ்செய்யுந் துரியோதனன்தன்னை மன்னவனல்லா
தெழுப்பிவிட்டால், கோபங்கொண்டுதிரு சூலத்தினாலவர் குத்திக்
குலக்கழு வேற்றிடுவார். (255)

புண்ணியவான்துரை தர்மருமேயவர் போகமனத்தினில் தா
ன்கேட்டு, பண்ணியதர்மத்தில் பாதிதந்தேயவர் பாழ்நரகைவிட்
டெழுப்பினாரே. (256)

கூடவேநூற்றுவர் தங்களைப்பின்னாலே கூட்டியெமபுரந் தன்
னில்புக்கி, நாடிமறலிபாதத்தில்வீழ்ந்தவர் நல்லடிபோற்றியே தெ
ண்டனிட்டார். (257)

தெண்டனிட்ட தர்மர் நூற்றுவரேயெந்தன் சேதியல்லாமல்
யெழுப்பினதார், மண்டலந்தன்னி லவர்செய்தபாவத்தைவாயினா
ற்சொல்ல முடியாதே. (258)

வாட்டமில்லாத்திரி யோதனன்நூற்றுவர் மாபாவஞ்செய்த
கொடுமையினால், கேட்டமில்லாத்தனி யேழாநரகத்தில் சேர்ந்தி
ட்டபேரை யெழுபபினதார். (259)

நான்செய்தபுண்ணியம் பாதிதந்தேயவர் நாடுங்குழியைவிட்
டெழுப்பிவந்தேன், வாஞ்சையதாயந்தக் குற்றம்பொறுத்தென்
னை வைகுண்டஞ்சேர்த்துமென் றேதொழுதார். (260)

இன்பங்குளிர்ந்தவர் தாமரைக்கையாலே யெடுத்தேயணைத்
து முகங்குளிர்ந்து, அன்புடனேசென்று வைகுண்டம்போயந்த
ஆயன்பதங்காணு மென்றுரைத்தார். (261)

எமனுக்கேவலாய் நூற்றுவர்தங்களை இங்கேயிருமெனத் தா
னுரைத்து, வாய்மையாய்த்தர்ம ராசன்முன்னேகையில் வாங்கிவி
டைமிக தானந்தந்தார். (262)

தேவர்கள் இந்திரன் வானவர்கள் சூழ திசைக்குப்பாலகர் நா
ரதரும், நாவலர்போற்றும் வசிஷ்டர்விசுவாமித்திரா நாடிபிரமன்
பதம்புகுந்தார்- (263)

தேருந்தெருவீதி சோடிணையும் அங்கேசெம்பொன் அணிந்தி
டும் மண்டபத்தில், ஆரும்புகழ்ந்திடும் பிரமன்பதம்போற்றி அடி
பணிந்தேதர்மர் தெண்டனிட்டார். (264)

ஆய்ந்திடும்வேத முதலோனேயிங்கே அம்புவிதன்னைப்படை
த்தோனே, சார்ந்துமேமால்பதம் வைகுந்தங்காணவே சாமியெ
னையு மனுப்புமையா. (265)

தாயகமாக பிரமனெழுந்துமே சகலருங்கூடி வருகையிலே,
மாயவனாரங்கேவைகுண்டம்விட்டுமே வந்தாரேயந்த வழிதனிலே,

தேவையாய்த்தருமனும் மாயவனார்பாதம் தேடியேபோற்றி மிகவணங்கி, மூவுலகாண்டிடும் மால்திருப்பாதத்தில் முக்காலும் போற்றித் தொழுதாரே. (267)

சர்ந்தமாகிய தர்மருமேநல்ல சாமியைப்போற்றி மிகவணங்கி, வாழ்ந்தகமாக மனமகிழ்ந்தேநீயும் வைகுண்டம்வாவென்றழைத்தனரே. (268)

எத்திசையெங்கும் புகழ்ந்தேத்தும் தேவேந்திரமறவி பிர்மாவுடனே, மத்தளம்பேரி முரசுமதிர்ந்திட வந்தேதகைலை மலையைக் கண்டார். (269)

காட்சிகதித்த கயிலைமலைத்தேவர் கைகுவித்தேதொழுதேத்துமலை. சூட்சிமிருந்த சிகரமலைசந்திர சூரியர்வலமாக சுற்றுமலை.()

தர்மம்மிருந்துசெழித்தமலைசூரர் தன்னையழித்தபரமன்மலை, கர்மங்களெல்லாம் பறக்குமலைஞானக் கண்கள்மிருத்து திறக்குமலை. (271)

குணம்மெங்குமேவியே சார்ந்தமலைசெய்யுங் குற்றங்களெல்லாந் தவிர்க்குமலை, மனமெங்கும்வீசி மகிழ்ந்தமலைதிரு வாழுகயிலாச மலையில்வந்தமர்ந்தார். (272)

வந்துஎல்லோரும் மிகவணங்கிசிவன் மாமலர்பாதமே போற்றிசெய்ய, சந்தோஷமாகவே மாலும்சிவனுமே தான்தழுவியங்கே தானிருந்தார். (273)

வாருந்துரைதர்மர் இங்கேயிருமென்று வாழ்த்திவிடையது தான்கொடுக்க, சீரானவைகுந்தம் போகவிடைதர செய்யுமென்றேதர்மர் தான்பணிந்தார். (274)

சந்தோஷமாவக் கைலைமலைவளர் சாமிவிடையது தான்கொடுக்க, மந்திரஞ் சேரும்வைகுண்டபதிதன்னை வந்துகண்டார் தேவரெல்லோரும். (275)

வைகுந்தவான்பதி வீதிகளும்அங்கே மாமலர்சோலையும் மேடைகளும், கையுரமாகிய புன்னைகளுமங்கே காய்த்துவளர்கின்ற தென்னைகளும். (276)

வாய்ச்சகனிகதிர் வாழைகளுமடல் மாமணம்வீசிய தாழைகளும், காயச்சவெலுமிச்சை நாரத்தையுங்கனி யானகொடிமிச்சை மாதளையும். (2 7)

ஊஞ்சல்களாடிடும் பூமரங்கள்கனி யுத்திராட்சம்பொங்கு மாமரங்கள், வாஞ்சைநீராடிய பொய்கைகளும்பால் மாமணம்வீசிய வாழைகளும். (278)

பூவினில்தேனுண்ணும் வண்டினையுமந்த பொய்கையிலேயன்னம் நீராடும், காவினிற்கிள்ளை கவிபாடும்ராம காகுத்தனென்றே குயில்கூவும். (279)

பொன்னின்தகட்டினுல் வேச்சல்களும்வீடு பூட்டுகிலேவச்சிர காட்டுகளும், நன்னயமான நவமணிதங்கிய நற்கதவுமாணப்பொற் கதவும். (280)

தங்கக்கலச முகடுகளும்அங்கே சாவடிசெம்பொன் தகடுக ளும், மாதர்களெங்கும் மயிற்சாடைதங்க மாநகர்வீதி மணி மேடை. (281)

மார்க்கரகுராமர் வாழ்ந்துவரும்அந்த வைகுந்தமென்னுந் திருப்பதியை, பார்க்கமகிழ்ந்துமே வைகுந்தவாசல் பரமனைப்போ ற்றி யடிதொழுதார். (282)

மாயனேவைகுந்த வாசாதிருப்பதி மாலழகாரகு நாயகனே, ஆயனேஅச்சுத செங்கண்மாலேயென் றடிதொழுதேதர்மர் தெண் டனிட்டார். (283)

சீதாகோவிந்தா நாரணவிண்டுவே தேவர்கள்போற்றுந் திரு மாலே, மாதவா அன்றுநீ யெங்களைக்காத்திட்ட வாமனே யென்று தெண்டனிட்டார். (284)

தெண்டனிட்டேயவர் மூவருந்தர்மரும் தேவர்முனிவர்கள் தான்சூழ, மண்டலமேபுகழ் வைகுண்டவீதியில் வாரார்வலமாக வெல்லோரும். (285)

தாளமத்தளம் டவில்முரசுபேரி தாரைகள்கொம்புகள் தா னாக, வாழுந்திருப்பதி தென்திசைவீதியில் வந்தனர்வானோர்மலர் சொரிய. (286)

தென்புறவீதியும் சுற்றிவருகவே தேவர்கள்பொன்மாரி தான் பொழிய, கும்புகும்பாகவே தானடக்கும்வெகு கொத்தள்வீதி கடந்தனரே. (287)

வெள்ளைக்கவரிவெண் சாமரைவீசிட வேடிக்கைகோடிவிளங்கி வர, வள்ளல்வைகுண்ட வடக்குவீதித்தெரு வந்திடமாவலி கண் டனனே. (288)

பேரிகைதுந்துமி வர்க்கமுடனிங்கே பேரணியாகவே வந்தவ னர், காரியமேதென்று மாவலிகேட்டிட கண்ணருந்தானே மொ ழிந்தனரே. (289)

வையகத்திலிவ னறிலொன்றுகவே வாங்கியதர்ம மென்றே யுரைத்தார், பையவேசாமி யுரைத்திடவே அவன் பார்த்துமனமும் பூர்த்திடவே. (290)

பூமியிலேழைக் குடிகெடுமேயிவன் புண்ணியவானே பாவ மென்றால், சாமியுரைத்திட மாவலிகேட்டுமே தர்மவானிவன்று னெனவே. (291)

உத்தன்கிருபையால் வந்ததினுலிவன் உத்தமனுகு மெனவு ரைத்தார், சந்தோஷமாகவே மாவலிதானங்கே தர்மரைத்றாவித் தழுவினரே. (292)

அங்குள்ளவீதிகளை சுற்றிவர அவர் ஐவருமங்கே அருகணைக்க, சிங்காரமான கொலுவருகேசென்று தெண்டனிட்டார்தேவரெல் லோரும். (293)

தேவரைப்போற்றியே தர்மரிடஞ்சென்று சிந்தைமகிழ்ந்து சந்தோஷமதாய், மூவடிகேட்டங்கே யோரடியாய்க்கொண்ட மூர்த்திகடாக்ஷமென்றே யுரைத்தார். (294)

பஞ்சவர்துரோபதை யாளுடனேமாயன் பாதம்பணிந்தவர் போற்றிசெய்தார், வஞ்சமறியாத பஞ்சவரைக்கண்டு மாயன்மகிழ்ந்திடத் தேவரெல்லாம் (295)

தேவர்வருகவே தெய்வலோகம்பெற்ற தேவேந்திரனுடன் றன்வருக, மூவருமங்கே யுலாவிநிற்கரிஷி முனிவனுமங்கே சூழ்ந்துவர. (296)

நீதிநெறிகளுந் தான்விளங்கப்பதி னெட்டுமேளங்களும் தான்வழங்க, மாதர்கடாலாத்தி யேந்திடவேமல்லி மாலைகள்மார்பில் விளங்கிடவே. (297)

வெற்றிசேர்வீதியிற் றுங்கொடுத்தசெம்பொன் வீரியமண்டபந் தானடுத்தே, செ[illegible]ணிமேடை சிம்மாதனத்திலே சேர்த்தினைவரும துரோபதையும். (298)

சிம்மாசனத்தினிற் றனிருந்தாரவர் செங்கண்மாபாதந் துணையெனவே. கும்மல்விட்டதேவர் தன்பதிசேர்ந்தவர் கூடியென்னளு மலங்கிர்தமாய். (299)

வாழிவைகுந்தமும் வாழியவேசெங்கண் மாலுந்திருமகள் வாழியவே, வாழிகைலை மலைவாழிசிவன் மாதுஉமையாள் மிகவாழி.

நூல்வாழிநூலா சிரியரும்வாழிநூ லெழுதும்புலவரும் வாழிசெங், கோல்வாழிமன்னர் முடிவாழி குடிகளோங்கி மிகவும் வாழியவே. (301)

நாவலர் பாவலரும்வாழி அச்சிட்ட சன் ஆப் பிரசும்வாழி, காவலர்வாழி கவிவாழி கடல்சூழ்ந்த வுலகமும் வாழியவே. (302)

வைகுந்தக்கும்மி முற்றிற்று,

224788

ஸன் ஆப் இந்தியா பிரஸ், சூளை மதராஸ்.

புத்தகங்களின் கிரயஜாபிதா.

	ரூ.	அ.
விநாயகர் கொத்து அல்லது பிரபந்தத்திரட்டு	1	8
ஸ்ரீமகா பக்தவிஜயம் 6-தாசர்களின் சரித்திரம்	1	4
ஷை கிளேசு	2	8
ஞானக்கோர்வை 2-பாகம்	1	4
அருணாசல புராணம் பட்துடன் பாட்டுஉரையும்	2	0
ஷை கிளேசு	2	8
நாலாயிரபிரபந்தம்	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	8
ஷை 2-ம் பாகம்	2	8
நாலடியார் உரை	1	8
திருவிளையாடற்புராண வசனம் 64-படங்களுடன்	2	0
பெரியபுராணவசனம் 72-படங்களுள்ளது	2	0
கெருடபுராண வசனம்	0	8
பகவற்கீதை வசனம்	1	8
ஸ்ரீ பாலபக்தவிஜயம்	0	12
இராமலிங்கசுவாமிகள் திருவருட்பா 6-திருமுறைகள்	5	0
மூவர் அடங்கன்முறை	5	0
தாயுமானவர் பாடல்	1	0
ஷை மூலமும் உரையும்	4	0
தேவாரத்திரட்டு	0	4
பன்னிரண்டுமந்திரிகதை	0	8
ஸ்ரீகள் பக்தவிஜயமென்னும் பதிவிரதை சரித்திரம்	1	0
வாலிமோட்சம்	0	4

	ரூ.	அ.
அரிச்சந்திரபுராணம் மூலமும்-உரையும்	2	0
ஆத்மரட்சாமிர்தமென்னும் வைத்திய சாரசங்கிரகம்	2	8
ஷை மட்டம்	1	4
குடும்பசாஸ்திரமென்னும் சௌக்கியசாஸ்திரம்	1	8
தற்காலவைத்தியபோதினி	0	8
படுக்கை அறையில் பாசாங்குசெய்த பங்கஜவல்லி	0	8
மோகனசுந்தரி	0	6
பிருஹஜ்ஜாதக மென்னும் மங்கலேஸ்வரீயம்	2	0
ஸ்ரீராமரகசியம்	0	6
அநுபோகபிரசன்ன ஆரூடம்	0	8
மோகனாம்பாள்	0	8
சிங்காரவல்லி	0	8
விக்கிரமாதித்தன்கதை	1	4
மேற்படி திக்கு	2	0
நளச்சக்கரவர்த்திகதை	0	4
தென்னாலிராமன்கதை	0	4
மயிலிராவணன் கதை	0	4
தேசிங்குராஜன் கதை	0	4
நல்லதங்காள் கதை	0	3
[illegible]ண்டன்கதை	0	3
[illegible]டிராஜன் கதை	0	8
பஞ்சபாண்டவர்வனவாசம்	0	8
தலைவாங்கி அபூர்வசிந்தாமணி	1	0
தாய்க்கிழவிகள் தலுக்கு	0	8
சிவலோக கிரிமினல் கேஸ்	0	12
தயாபரசுந்தரி	0	12

எமது கம்பெனி பெரிய கேட்லாக் தேவையானவர்கள் அரை யணா [illegible] எழுதிப் பெ[illegible]

விலாசம்—எஸ். பி. இராஜாராம் கம்பெனி,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.